செ.வெ.எண் : 127/2020 நாள் : 18.03.2020

**<u>கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து காஞ்சிபுரம் மாவட்ட தொழிற்சாலை பரதிநிதிகளுடன் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**

காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பாக கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து காஞ்சிபுரம் மாவட்ட தொழிலற்சாலை பிரதிநிகளுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.03.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளில் இருந்து தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் சுமார் 250க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு அன்றாடம் வரும் பணியாளர்கள் அனைவருக்கும் கைகழுவும் திரவத்தினை கொண்டு கைகளை சுத்தம் செய்து கொள்ளும் முறை குறித்து அறிவுறுத்தவும், தடுப்பு நடவடிக்கையாக தொழிற்சாலைகளில் கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளவும், தொழிற்சாலைகளில் அன்றாடம் பயன்படுத்தும் தொழில்நுட்ப கருவிகளில் கிருமிநாசினி கொண்டு தூய்மைபடுத்தவும் தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தொழிற்சாலையில் உள்ள உணவகங்கள், கலந்தாய்வு கூடங்கள் மற்றும் பணியாற்றும் இடங்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்கவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து பணியாளர்களிடமிருந்து புகார்களை பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாடு அறை தொலைபேசி எண் 044-27237107 / 044-27237207-னை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் திரு.ரவிச்சந்திரன், சுற்றுசூழல் ஆய்வாளர் திரு.சசிகுமார், இணை இயக்குனர் (மருத்துவ பணிகள்) மரு.ஜீவா, துணை இயக்குனர் (சுகாதாரப்பணிகள்) மரு.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.நாராயணன், இந்தியன் வங்கி முன்னோடி மேலாளர் திரு.சண்முகராஜ், உதவி பொறியாளர் (சுற்றுசூழல்) திரு.சோமசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.